**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**தேதி: 12.02.2026**

**OS. No. 37/2023**

**வழக்கு சாட்சி PW.1– நாகமணி, த/பெ.நாகுபிள்ளை**

**1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரம் எனக்குத்தெரியும்.. எனது அப்பா காணாமல் போய்விட்டார் , அவர் உயிருடன் இருப்பதற்கு வாய்ப்பில்லை . எனவே இறப்புச்சான்றிதழ் வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் . நான் தாண்டிக்குடியில் வசித்து வருகிறேன் . தாண்டிக்குடியில் வசித்துவருவதாக காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை காணாமல் போகும்பொழுது தாண்டிக்குடி விலாசத்தில்தான் குடியிருந்தார் . எனது தந்தை 07.09.2010 தேதி முதல் காணாமல் போய்விட்டார் . எனது தந்தை காணாமல் போனது தொடர்பாக அவரைக் கண்டுபிடிக்கவேண்டி என்னென்ன முறையான நடவடிக்கைகள் மேற்கொண்டேன் என்றால் 2010 ல் அவர் காணாமல் போன பிறகு அவரைத்தேடினோம் . பிறகு 2022 ல் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரிடம் எனது தந்தையை காணவில்லையென மனுக்கொடுத்தேன் . அதன்பேரில் தாண்டிக்குடி காவல்நிலையத்திற்கு புகார் மாற்றப்பட்டது என்ற விபரம் மட்டும் தெரியும் . 12 வருட கால தாமதத்திற்கு பிறகு ஏன் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்கப்பட்டது என்றால் வாரிசு சான்றிதழ் பெற வேண்டி தந்தை காணவில்லையென மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்கபட்டது . எனது அம்மா 2021 ல் காலமாகிவிட்டார். எனது அப்பாவிற்கு சொந்தமான சொத்துக்களை பெறவேண்டி அதுதொடர்பாக இறப்புச்சான்று பெற்வேண்டி எனது அப்பா இறந்துவிட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.02.12 14:36:14 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.